உ

சிவமயம்.

# மறைக்காட்டம்மானை
# மாலையென்னும்
# பரத்தையர்மாலை.

இஃது.

தண்ணீர்க்குளம்,

குப்பவிநாயகங்காரரால்

பார்வையிடப்பட்டு

வளவனூர்

முத்துசாமிமுதலியா

ரவர்களது

முத்தமிழ்விளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

துன்மதி௵ — ஆனி௴

உ

கணபதி துணை.

# பரத்தையர் மாலை.

பொய்சொல்லிவாழும்பொதுமடவாராசையை
நீ,மெய்யென்றுநம்பிமெலியாதே-சைவத் ... *
திருநீலகண்டரருள்செல்வப்பிள்ளையை ... *
ஒருபோதெனினுநெஞ்சேயோது ... ... *
சீர்கொண்டமாணிக்கவல்லிரத்ந ... ...... *
செயவல்லிநயவல்லிசித்ரவல்லி ... — *
ஏர்கொண்டசுகவல்லிமோகவல்லி ... ... *
இயல்கொண்டமகராசவல்லியென்றும் ... *
பேர்கொண்டகாமுகனைமயக்கியாசைப் ... *
பித்தளையவைத்தபெரும்பிணங்களான ... *
வார்கொண்டமுலைப்பரத்தைமாரைநீக்கி ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (உ)

பூமாலைமணிமாலைமுத்துமாலை ... ... *
பொன்மாலைமலர்மாலைபுனிதமாலை ... *
பாமாலைசர்க்கரைக்கற்கண்டுசீனி ... ... ... *
பத்மராகம்பவளஞ்சாந்துமோகக் ... ... *
காமேவுங்கஸ்தூரியெனும்பேர்கொண்டு ... *
காமுகரைப்பணம்பறிக்கக்கற்றமாய ... *
மாமாயவேசியரைமறந்துநீங்கி ... ... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (உ)

கைப்பொருளெல்லாமழியுமுடம்புக்கீனம் ... *
கண்களித்தவுறவினர்க்குங்கண்டபேர்க்கும் .. *
செப்பரியநகைக்கிடமாம்பாவமாகுஞ் ... *
செய்தொழிலுக்கிசைகேடுசிலர்க்குக்கோபம், *
இப்படியேபரத்தையர்தமின்பமெல்லாம் ... *
இமைப்பொழுதுமவருடனே யிணங்கலாமோ
மைப்பரவுங்கண்டத்தானெம்பிரானை ... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (௩)

தேளுக்குவிஷங்கொடுக்கில்வட்டமான ... *
திருக்கைமீன்றனக்குவிஷந்திரண்டமுள்வாள் .
நாளுக்குவிழங்கடிகைமுன்றேமுக்கால் ... *
நற்பாம்புதனக்குவிஷம் நான்கேயல்லாம் ... *
வேளுக்குவிஷங்கையிற்புஷ்பபாணம் ... .. *
வேசியர்க்கெண்சாணுடம்புவிஷமேகண்டீர் *
வாளுக்குநிகர்விழியாள்பாகத்தானை ... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ... (௪)

பாம்புக்குப்பால்வார்த்துவளர்த்தபோதும் ..
பாவிகாடனதுவிஷம்பற்றருது. . ... ... *
வேம்புக்குத்தேன்வார்த்துவளர்த்தபோது . *
மேன்மேலுமதன்கசப்புமேலிட்டோங்குந் ... *
தீம்புற்றபரத்தையர்க்குக்கோடிசெம்பொன் *
செய்தாலுமவர்குணத்தைத்திருப்பலாமோ . *
வாம்பெற்றத்தேறிவருமெம்பிரானை ...... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௫)

கடன்காரர்க்கைம்பதுபொன்கொடுக்கவே
ண்டுங், கைமாற்றுவைத்துடனங் கொடுக்கவே

ண்டுங்,குடங்காணுஞ்சாராயமளந்துவாங்கிக், *
குடித்தபணம்பதினைந்துகொடுக்கவேண்டும் *
இடங்காணேனும் கொடுக்கவென்று விதற்கென்
செய்வோ, மென்றுதெட்டிமெள்ளமெள்ள வி
தமாவாங்குமடங்காதபரத்தையரைமறந்துநீங்கி
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ .. (௬)

ஒருபொழுதும்பிரிந்திருக்க மாட்டோமுப்
பத், தொருநாள்விட்டெப்படிநீ ருறங்கப்போ
னீர், இருவருந்தானேத்தின்று கூடினேமோ. *
எத்தனைகாலங்கூடியிருந்துவாழ்ந்தோம் ... *
பருவமிதுகிடைக்குமோபாரீரென்பார் ... *
பசப்புவார்பணம்பறிப்பார்பரத்தைமாரை... *
மருவுவதும்சருவுவதும்வேண்டாமெங்கண்..*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (௭)

எத்தனைநாள்பிரிந்திருப்பேனுளவரபோலை *
யெழுதிவரக்காட்டினீரின்றுவந்தீர் .. ... *
பித்தனையாருவுமண்ங்கனிவுகாண்பேன் ... *
பேசாமலிருக்கின்றீர்பேய்கொண்டோ ... *
இத்தனைகாலமுடபிலலையெங்கேகற்றீர் ... *
என்றுதெட்டும்வேசியரையிகழ்ந்துநீங்கி ...*
மத்தனைமான்பழுவேந்துமெம்பிரானை ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... *

தாய்சலிக்கவேசியர்க்குக்கொடுத்துக்கெட்ட
சாய்குடியோனைக்கிழவிசந்தேகண்டால் ... *
எசலுக்குவந்தீரோவொருகாசுக்கும் ... ...*
இடமில்லாவெறுமூடரிங்கேன்வந்தீர் ... *

பூசலுக்குவந்தீரோமதிகெட்டீரோ ... ... *
போக்கிடம்வேறில்லையோபோம்போமென்று.
வாசலுக்குவரவொட்டாரவனைநீங்கி. ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ.... (௯)

பெண்டாட்டிபகையாவாள்தகப்பனும்..*
பெற்றவளும்வாய்திறந்துபேசமாட்டார் ... *
கொண்டாட்டமாயிருந்ததமையன்தம்பி... .*
கோவிப்பாரன்னியருங்கூடச்சொல்வார் ... *
திண்டாட்டமாமுறவின்முறையாரெல்லாஞ் .*
சீயென்பார்நாயென்பார்திருடனென்பார்... *
வண்டாட்டமுள்ளபரத்தையரைவிட்டு .. .*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ......(௰)

வீரவாளிப்பட்டுபொன்மைப்பட்டு... ...*
வெண்பட்டுசெம்பட்டுவீதிப்பட்டு ... ...*
சாரிமேகப்பட்டுமாடைவன்னத் ... ... *
தலையெழுத்துநிறையெழுத்துச்சந்திரகாவி .*
சேருமிளமாதுளம்பூவன்னமென்னுஞ் ... *
சேலைகொடுத்தாலுமென்னசெய்தீரென்பார் .*
வாருநீர்பரத்தையரைவிட்டுநீங்கி ... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௰௧)

கருதரியகனியிருக்கச்சிறுகாய்தேடிக்... *
கையிலேகரும்பிருக்கவேம்புதேடித் ... *
தெரியவிளக்கிருக்கமின்மினியைத்தேடித்...*
தேனிருக்கச்சாராயந்தேடுவார்போற் ... ...*
பரிவுடையமனையாட்டியிருக்கமாயப் ... ...*
பரத்தையரைத்தேடினீர்துயரமுந்தோற்க

மருவுபெரும்பாவிகளாய்ப்போகவேண்டாம்*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே ...(௰௨)

தெள்ளமுதமிருக்கவிஷந்தேடிவாழை...*
செய்யகனியிருக்கக்காஞ்சிரங்காய்த்தேடி ...*
வெள்ளிலைபாக்கிருக்கத்தம்பலம்போய்த்தேடி.
மெல்லியபொற்கலையிருக்கக்கந்தைதேடி ..*
உள்ளதிருமாதுபோலழகுங்கற்பும் ... *
உள்ளமனையாளிருக்கப்பரத்தைமார்க்கு... *
மள்ளியகைப்பொருள்கொடுத்துவருந்தவேண்
டா,மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே. ௰௩)

காட்டுக்கேயெறித்தநிலாபெருகுமாற்றிற்.*
கரைத்தபுளிகமர்வெடிப்பிற்கவிழ்த்தபால்பா
ழ்,வீட்டுக்கேயிடும்விளக்கைவெள்ளமாக... *
விழலுக்கேயிறைத்ததண்ணீர்வேம்புக்கேதான்
சேட்டுக்கேசொரிபசுந்தேன்பரத்தைமார்க்குச்.
செய்தநன்றியவ்வாறுஞ்செப்பலாகும்...... *
மாட்டுக்கேயேறிவருமெம்பிரானை ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே ...(௰௪)

முன்னொருவன்வாயிற்றம்பலத்தைவாங்கி .*
மூசியாமற்றங்களிடவாயிற்கொண்டு ... *
பின்னொருவன்வந்தவுடனவன்வாய்தன்னில்..*
பேதமறவுமிழ்ந்துநலம்பேசிப்பின்னுந் ... *
தன்னினங்கள்கேட்டவர்க்குமிந்தச்செறி ... *
தாராதபரத்தையரைத்தழுவலாமோ... ...*
மன்னுதின்றநஞ்சுறையுங்கண்டத்தானை... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே,... (௰௫)

நெருப்பிலேகுளிர்ந்தகுணங்காணலாகும். *
நீர்ப்பெருக்கினீந்தாமனிற்கலாகும் ... ... *
பொருப்பிலேசெழுந்தயிலம்வடிக்கலாகும்...*
பொருந்தாதவிஷங்கடனைப்பொருத்தலாகும் *
கருப்புவாய்மதுரமொழிப்பரத்தைமார்தங் - *
கபடத்தையெவராலுங்கடக்கலாமோ ... .. *
மருப்புறுவாரணமுறிந்து நின்றதேவை ..... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ... (௰௬)
கூத்தியர்கள்கபடத்தையறியவென்றால்., *
கொஞ்சமல்லதங்களுக்குக்கூடாதென்றே .. *
நீத்தசிவன்மழுவெடுத்தான்றிருமால்பண்டு .. *
நெய்யிலேகையிட்டானிறைந்தவேதன் .. ...*
ஏத்தரியசத்தியதேசத்தேசேர்ந்தான் .. ...*
எப்படிநீரிளைஞோராயிவரைச்சேர்ந்தீர் ... *
வாய்த்ததனிவேசியரைவிட்டுநீங்கி ... ... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (௰எ)
தெருவில்லேபுறப்படுவார்முலையைச்சற்றே *
திறப்பார்மெத்தெனநடப்பார்திரும்பிப்பார்ப்பார், உருவிலேயிளைஞோரைப்பார்ப்பாராகை
யுள்ளவர்போன்மயங்குவாருடன்மேல்வீழ்ந்து
சருவுவாரழைத்துக்கொண்டுள்ளேபோவார்... *
தாம்பொருந்தும்பணவிலைக்குத்தக்கதாக ... *
மருவுவார்பரத்தையரைவிட்டுநீங்கி ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ... (௰அ)
பிணங்கண்டாற்கழுகோடிச்சுற்றிக்கொள்ளும், பிணிகண்டால்வயித்தியரோர்பேசுமங்கே .. *

நிணங்கண்டாற்காகநாய்பிடிங்கித்தின்னு ...*
நீர்கண்டால்முதலைவந்துநெருங்கிக்கொள்ளும்
பணங்கண்டால்விலைமாதராசைநெஞ்சம்...*
பாலிப்பாரவரைமுகம்பார்க்கலாமோ ...*
மணங்கண்டான்மதுவருந்தும்வண்டுபோல .*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௰௧)

காலுக்குக்காலாழியெங்கேகைக்குக் .. ...*
கடகமெங்கேசவுளியெங்கேகடுக்கனெங்கே.*
பாலுக்குப்பசுவெங்கேயெருமையெங்கே ,. *
பண்ணைக்குமாடெங்கேபவளமெங்கே... ..*
மேலுக்குமஞ்சளெங்கேயென்றுதெட்டி ..*
மெள்ளமெள்ளப்பறிக்குமந்தவேசிமாரை ..*
மாலுக்குத்துணையென்றுநம்பவேண்டா ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ...(௰௨)

வேசியர்க்குநெஞ்சிரக்கஞ்சற்றுமில்லை ...*
வேசியர்க்குச்சாதிகுலந்தானுமில்லை ... ...*
வேசியர்க்குச்செய்தநன்றியறிவதில்லை ... *
வேசியர்க்குப்பொய்யல்லான்மெய்யொன்றில்லை
வேசியர்க்குநிறைபொறுமைநாணமில்லை ...*
வேசியர்க்குவிதரணமோமிகுதியில்லை ...*
வேசியர்க்குப் பணங்கொடுத்து விரும்பவேண்
டாம்,விமலர்மறைக்காடர்பதம்விரும்புவீரோ )

ஆடிக்குச்சேலையந்துவாங்கவேண்டும்..*
ஆடுபன்றிகோழிகருவாடுவேண்டும் ......*
வேடிக்கைமூக்குத்திசவுளிவேண்டும் ... *
மீன்காடைசவுதாரிநாரைவேண்டும்... ..*

சாடிக்குச்சாராயநிறைக்கவேண்டும் ... ... ... *
தாருமென்றுபணம்பறிக்குஞ்சமர்த்தியாண. *
வாடிக்கைத்தாய்க்கிழவிமயலைநீங்கி ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (௨௨)

வேண்டியபொன் றன்கொடுத்துத் திரிந்த
பேர்கள்,மிடிவந்தாற்றங்களிட வீட்டின்வாசல்.
ஆண்டியெனவுருமாறித்தனிவந்தாலும், அதுக்
கேற்றபேர்களைக்கொண்டடித்துத்தள்ளித். *
திண்டுகினும்பாவமெனவுரைப்பார்வேசித் ... *
தெரிவையர்கடெருவினிலும்செல்லலாமோ .. *
மாண்டவொருமாபெலிக்கேயுலகமீந்த ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (௨௩)

இந்திரனேயானாலுங்கொடுப்பதொன்று.. *
யில்லையென்றலவனைவெறுத்தீனமொன்பார் .. *
கொந்துலகிற்புலையர்தாமெவரொன்றுங் . *
கொடுப்பவரோதங்கள்குலதெய்வமென்பார் .. *
சுந்தரமாய்க்கையிலுள்ளபொருளையெல்லாஞ்..
சுத்தவட்டைபோலிருந்துசுற்றிக்கொள்வார் ... *
மந்திரமுந்தந்திரமுமருந்துமான ... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (௨௪)

வீட்டிலேவலியவந்துநயங்கள்பேசி ... *
விழிகாட்டிமுலைகாட்டிவிகாரமூட்டி... ... *
கோட்டிலேசிறந்தமறப்பாவைமட்டாலே ... *
குறித்துநிதியுள்ளதெல்லாங்கொள்ளைகொண்டு
நாட்டிலேபோய்ப்பிழையுமென்றுசொல்லி *
நழுவிப்போம்பரத்தையரைநம்பவேண்டாம் *

மாட்டிலேயேறிவருமெம்பிரானை ... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே....(௨௫)

நாடிவருமிரவலர்க்கு மொன்றுஞ்செய்யார்..
நல்லோர்க்குமொருகாசுநல்கமாட்டார் ... *
பாடுபடுந்தாயார்க்குந்தகப்பனார்க்கும் ... *
பணமொன்றுங்கொடுத்தறியார் பரத்தைமார்க்
குத், தேடியிடும்பிள்ளைகளாய்த்திரிவார்பின்னு
ந்,திரிந்துதிரிந்தென்னபலன்சேரக்கண்டார். *
வாடியிடும்பரத்தையரைவிட்டுநீங்கி. ... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே....(௨௬)

பாவவினைக் கொடுமையினாற் பரத்தைமார்க்
குப், பல்காலுங்கொடுத்தழிக்கும்பணத்தையெ
ல்லாங், கோயிலுக்குக்கொடுத்தாலும் பலனேயு
ண்டு, குருக்களுக்குக்கொடுத்தாலுங்குறைவரா
து, நாவலர்க்குக்கொடுத்தாலுங்கீர்த்தியுண்டு.. *
நல்லோர்க்குக்கொடுத்தாலும்பலனேயுண்டு....*
வாவிவாழ்பரத்தையரைவிட்டுநீங்கி... ... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே... (௨௭)

மூக்கிலேபித்தளைமூக்குத்திகண்டீர் ... *
மூலையிலேபலபேருங்கிள்ளக்கண்டீர் .. ...*
பாக்கிலேபாஷாணங்கலப்பார்கண்டீர் ... *
பாயிலேபலபேரும்படுப்பார்கண்டீர்... ...*
நாக்கிலேசாராயநாற்றங்கண்டீர் ... ... *
நாடோறும்பணம்பறிக்கும்நயமுங்கண்டீர்...*
வாக்கினிலும்பரத்தையரைவிட்டுநீங்கி... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே... (௨௮)

ஒருத்தியெனக்கெதிரானவீட்டுக்காரி ...*
ஒருமாத்திரைக்கெழுபதுபொன் னுடைமைநூறு
பருத்தூறுந்திலதவன்னச்சேலைபத்தும் ...[ம்
படிநூற்றுக்கலநெல்லும்பற்றினாள்காண் ...*
திருத்தியதிலேபாதிமாதமாதம் ... ... *
சிக்காமற்றருமென்றுதெட்டிவாங்கி ... *
வருத்துகின்றபரத்தையனைவிட்டுநீங்கி ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ....(௨௯)
எட்டியிலேகட்டுமாம்பழமுண்டாமோ ...*
இலவிலேஇனியபலாச்சுளையுண்டாமோ... *
நெட்டியிலேநற்கருப்பஞ்சாறுண்டாமோ...*
நெருப்பிலேகுளிர்ந்தபனிநீருண்டாமோ *
கொட்டியிலேசெங்கழுநீர்ப்பூவுண்டாமோ..!*
கோதையர்களிடத்திநல்லகுணமுண்டாமோ.*
மட்டளகப்பரத்தையனைவிட்டுநீங்கி .... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௩௰)
மு[illegible]காட்டிமுலையில்வைத்தகுறியுங்காட்டி*
முகங்காட்டிவிளக்கியபன்முழுதுங்காட்டிக்.*
கொலைகாட்டிநெடுங்கடைக்கண்சற்றேகாட்டிக்
கொஞ்சுகிளிமொழிகாட்டிக்கூறியல்குல் ...*
விலைகாட்டித்தெருத்தோறுந்திரியுமந்த... *
வேசியரைக்கூடமனம்விரும்பலாமோ... ...*
மலைகாட்டுமுலைப்பரத்தைமாரைநீங்கி ... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (௩௧)
சேலையென்பார்பணமென்பார்சிந்தாக்கெ
ன்பார், திருநாளிற்செல வெல்லாஞ்செய்யுமெ

ன்பார், ஓலையென்பார்பறித்துக்கொண்டுள்ளே
போவார், ஓங்கியதாய்க்கிழவிசற்றேறமுட்டாளெ
ன்றும், பாலையும்நீரையும் பிரிக்குமன்னம்போ
லப், பகுத்துண்ணும் பரத்தையரைப் பரவலா
மோ, மாலயனும் போற்றுகின்றகண்டத்தானை,
மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே ... (௫௨)

ஒருவனைமுன்மடியின்மே லுறங்கப்பண்ணி.
ஒருவனுக்குச்செங்கனிவாயூரற்றேக்கி ... *
ஒருவனையப்பாலிருத்தியுறவுபேசி ... *
ஒருவனுக்குமுலைக்காட்டிமயலைப்பூட்டி .. *
வருமிளைஞோராயிரம்பேரொருகாலத்தில் ...*
வந்தாலுமாயமிடும்பரத்தைமாரை ... ...*
மருவுசுகபோகத்தைமறந்துநீங்கி ... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே ... (௫௩)

சிலபேரைமெத்தையின்மே லிருத்திக்கொ
ண்டு, சிலபேரைமுற்றத்தேசெல்லவிட்டுச் ...*
சிலபேரைத்தெருவாசற் புறம்பேவிட்[illegible] ...*
சிலபேரைத்தெருத்தோறுந்திரியவிட்டு ... *
மலிவாசற்காரர்தம்மைக்காய்ச்சலோடு .. ...*
வளவிலைகிடந்துழலவருத்திமாய ... ...*
வலைவீசும்வேசியரைமறந்துநீங்கி ... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே ... (௫௪)

ஊர்க்குநீர்போனநாண்முதலாவேறிங் ...*
கொருவருடன்பேச்சுமில்லையுறக்கமில்லை ...*
ஆர்க்குநானிதையுரைப்பேன்பெற்றதாயும்...*
அடுத்தவரும்பகையாகவாலசகொண்டேன்...*

தீர்க்குமருந்தறிபீரோவென்றுநாட்பித் ... *
தெருட்டுவார்பணம்பறிப்பார்திருட்டுவேசி. .*
மார்க்குநீமனமுருகிமயங்கவேண்டா ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ... (௧௫)

பரத்தையரோடிணங்கிற்பாவமேலாம். *
பரலோகங்கிடையாதுபணமும்பாழாம் .. *
இரப்பதிலுங்கடையாவர்கிரந்திசூலை ... *
இளவயதிலேபிடிக்குமிருமலுண்டாம் ... ...*
உரத்திடுபாஷாணத்தாற்கழுவணெய்யால் ...*
உப்பிருந்தபாண்டம்போலுளுத்துப்போகும்.
மாத்திரெபனும்பரத்தையனைவிட்டுநீங்கி ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௧௬)

மாமியார்பிடித்தவனைத்தெருவிலோட்டும்.*
மாமியாருள்ளவனையுள்ளேவைக்கும்.. ...*
மாமியார்கொடுப்பவனைக்குருவாய்க்காணும் *
மாமியார்கொடாதவனைப்புலிபோற்பாயும்...*
மாமியாரெந்நேரமலட்டிக்கொல்லும் ... *
மாமியார்பரத்தையர்க்குத்தாயாரான ... *
மாமியார் மாயவலைக்குள்ளாகாமல்... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௧௭)

பச்சைசப்பாம்புலர்த்தியதின்சபேறொடொக்க
ம், பசுங்குள்ள்கமுகிருந்தபச்சையோந்தி... *
எச்சத்தைவாங்கிநன்றாயுலர்த்திக்கொண்டே. .*
இவையெல்லாம்பொடிபண்ணியெடுத்துக்கொ
ண்டு,கச்சுப்பூண்முலைதனிலேசீழ்ப்பேற்பூசிக்.,*
குனகமெல்லாந்தங்களிடைக்குளாக ... *

வைச்சுப்போமெனும்பரத்தையாரை நீங்கி... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ... (௫௮)

தாய்த்தலையின்மூளைகுழிநரிப்பிச்சுச்செந். *
தாய்ப்பாலுங்குரங்கிரணலுங்கூட்டித் ... *
தோய்த்தகழுதைப்பாலிலுரைத்துச்சங்கின்...*
சுண்ணாம்பினிற்கலந்தேயுண்டைசேர்த்துக் ..*
கார்த்தநறுஞ்சாதிக்காயேலம்பச்சைக் ... *
கர்ப்பூரப்பொடியின்மணங்கட்டிவைத்து...*
வாய்த்தமருந்திடும்பரத்தைமாரை நீங்கி ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௫௯)

நாய்க்கடுகுசிறுபூளைசிவனார்வேம்பு ... *
நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் நாவற்பட்
டை, பேய்க்கழுதைமுதுகினிணங் கழுவன்கா
வின், பெருவிரலி னகஞ்செத்த பிணத்தினூற்
றை, தாய்க்கிழவிசெவிக்குறும்பியிவைகளெல்
லாம், சங்கினிடச்சுண்ணாம்புதன்னிற்கூட்டி...*
வாய்க்கமருந்திடும்பரத்தைமாரை நீங்கி ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௬௰)

பாய்க்கிழவியெனக்கிடக்கும்பரத்தைமார்க்
குப், பணம்பறிக்கும்புத்திசொல்லும்பாவிபா
ன, தாய்க்கிழவிபொய்யெல்லாமெய்யதாகச் ,*
சாதிக்குங்கிழவிமயல்தானுண்டாக்கும்... ...*
பேய்க்கிழவிமூதேவிவடிவமான ... ... *
பிணக்கிழவிநாய்போலப்பிடுங்கித்தின்னும் ....*
வாய்க்கிழவிமாயவலைக்குள்ளாகாமல் ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (௬௧)

கடைக்கிழவிதன்வீட்டில்வந்தபேரைக் ...*
கடையாக்குங்கிழவிமுட்டிக்கழுதைபோல ...*
நடைக்கிழவிமாயமயற்கிழவிபொல்லா ... *
நரைக்கிழவியிளைஞோர்க்குநமன்போல்வந்த.*
கிடைக்கிழவிதான்கற்றவினையால்வெந்து ... *
கெடுங்கிழவிபரத்தையர்க்குத்தாயாரான ...*
மடைக்கிழவி மாயவலைக்குள்ளாகாமல்... ..*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௪௨)

கொலைக்கிழவிமருந்தாலுமிளைஞோர்தங்கள்
குடிகெடுக்குங்கிழவிநரைக்கோலமான ... *
தலைக்கிழவிபேராசைக்கிழவிநல்ல ... ...*
சாராயந்தனக்குமகள்தன்னைவிற்கும்... ... *
புலைக்கிழவிகுணங்கெட்டகிழவிமண்ணாய்ப் *
போங்கிழவிபரத்தையர்தாய்க்கிழவிமாய ... *
வலைக்கிழவிமாயமயற்குள்ளாகாமல் .... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௪௩)

சினக்கிழவிகண்கெட்டகிழவியேசும் ...*
திடக்கிழவியிளைஞோரைத்திருடராக்கும் ...*
வினைக்கிழவிபாசாங்குக்கிழவிமெத்த ... ...*
வினைக்கிழவிபழக்கிழவிவீம்புபேசும் ... *
கனக்கிழவிகொடுங்கிழவிபணத்தையெல்லாம்..
கைப்பற்றுங்கிழவிவிலைமாதர்தங்கள் ... *
மனைக்கிழவிதோதகத்துக்குள்ளாகாமல் ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௪௪)

பாவலர்க்கேகொடுத்தறிபார்வேதமோதும்*
பார்ப்பார்க்குங்கொடுத்தறியார்பாங்காய்தின்று..

நாவலர்க்குங்கொடுத்தறியாரிரவலர்க்கும் ... *
நல்லோர்க்குங்கொடுத்தறியார்நலஞ்சேர்கோயி
ல்,தேவர்க்குங்கொடுத்தறியார்தெரிவைமார்க்கு
த்,தேடியளித்திடுவரந்தச்சேதிவிட்டே... *
மாவலரிபலபூவுஞ்சூடுகின்ற ... ... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௪௫)

குரங்காசனத்தையொக்குநிதம்பத்தார்கள்*
கோட்டாலைக்காரியர்கள்கொடுத்தபேர்க்கும் *
இரங்காதநெஞ்சிபர்கள்படிக்கவாயார்.. ...*
எவரிடத்துமாசைசற்றுமில்லாதார்கள் .....*
பரங்காணுமென்றவனைக்கெடுக்கும்பாவப்...*
பரத்தையர்கட்கிரங்காமற்பலரும்போற்றும்*
வரங்காணுமாதுமையாள்பாகத்தானை ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௪௬)

நாய்பிடுங்குமுலையைநல்லகிரிபோலென்றும்
நரிபிடுங்குமிடைசிங்கவிடைபோலென்றும். *
ஈப்பிடிக்குமழக்கைச் செண்டகம்போலென்று
ம்,சிதைப்புண்ணும்செம்மயிர்க்கார்மேகமென்
றும், பீமிநிக்குங்காலையத்திக்கனிபோலென்று
ம்,பித்தேறிபிப்படியேபிதற்றிக்கொண்டு ...*
மாய்ந்துதிரிந்தேநரகிற்கிடாகாமல்... ...*
மறைக்காட்டிலம் மானைவணங்குவீரோ... (௪௭)

அரைப்பணத்தைக்காட்டிமுழுப்பணத்தை
வாங்கி, அனியாயம்பண்ணுகின்றவரிவைமார்கள்
களைப்புடையசொற்குள்ளாய்க்கஸமுங்கெட்டு
க்கையிலுள்ளபொருள்தனெல்லாங்கழிந்தபின்

ளர், இளைப்புடனே பலநோய்கொண் டிளமை
தன்னில்,பீடழிந் துதிரிந் துவரும்வீதி நீங்கி...*
வளைப்பலவிலாசகிரிபேவுகின்ற ... ... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ..(௪௮)

வேசியுடனேதிரிந் துவீணாள்போக்கும் ...*
வீம்பர்கடம்வினையத்தானமனார்தூதர்......*
வீசியிழுத்தேயிறுகக்கட்டிக்கொண்டு ... *
வெய்யவழின்மார்க்கத்தேமெள்ளச்சென்றங்..*
கூசிகள்கண்ணுத்தண்டிலுருவவெற்றி ... *
உழல்விப்பாராகையினாலொழித்துநீங்கி ... *
மாசிலாவெள்ளைவிடைதன்னிலேறும்,மறைக்கா

நரப்புடனேயெலும்புதிரந்தோலுங்கூடி..*
நான்முழத்தேயொன்பதுபீற்றலுமேயான..*
குரம்பைபடைவார்களொருபீற்றலுக்கே,கொடு
த்துவெகுசொர்ணமெல்லாங்குடிதான்கெட்டு*
நிரம்புமதிகெட்டவரோயினியென்றும் ...*
நேசமுடன்பரகுரவன்றன்னைப்போற்றி ... *
வரம்புநெறிதனினடந்துவிடைமீதேறும் ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ .. (௫௰)

ஆசையென்றனுன்மீதிற்கொண்டேனென்
பாள்,அழகானபெண்ணலவோ நானுமென்பா
ள்,நேசமுடனிணக்கமாய்நயங்கள்பேசி......*
நீர்வந்தானுன்செய்ததவமாமென்பாள் ... *
காசுபணந்தரவேண்டாம்வாருமென்பாள் ...*
கைக்குளகப்பட்டபின்புமதித்துப்பொல்லா.*

வாசகமுஞ்சொல்லுவாளவளை நீங்கி, மறைக்காட்
அங்காடிச்சுரைக்காய்போல்முலையினார்கள் *
அனைவருங்கொப்பளித்துமிழும்படிகவாயார்.
சங்காகும்வெண்மையெனவடித்துத்தாசைத் *
தப்புகின்றபானைபோலல்குலார்கள் .... *
அங்காலுமோரிடத்துமாசையில்லா... ... *
அரிவைபொதுமாதர்கடஞ்சுகத்தைநீங்கி ... *
மங்காதவெள்ளைவிடைதன்னிமேலேறும் ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (௫௨)

பணந்தானேகுலங்கல்விபரத்தைமார்க்குப் *
பணந்தானேபழகிளமைபரத்தைமார்க்குப் ...*
பணந்தானேகுணமுமழகுப்பரத்தைமார்க்குப்
பணந்தானேசுகபோகம்பரத்தைமார்க்குப்...*
பணந்தானேயலங்காரப்பரத்தைமார்க்குப்... *
பணந்தானேபஞ்சுமெத்தைபரத்தைமார்க்குப்.
பணந்தானேகொடுத்தணைந்தால்பாவம்போகப்
பயின்மறைக்காட்டீசர்பதம்பணிந்திடீரோ...()

பரத்தையரோயறியாமற்பறிக்கும்வேடர் ...*
பரத்தையரோகுடிகெடுக்கும்பகைவராவார் ...*
பரத்தையரோதழுவணையிற்பங்கங்கொள்வார். *
பரத்தையரோபாக்கொடுபாஷாணமீவார் ... *
பரத்தையரோபஞ்சபாதகமுஞ்செய்வார் ... *
பரத்தையரோபுரம்பேசிப்பழியுப்பார்... *
பரத்தையரோடிணக்கமுற்றபாவம்போகப்... *
பயின்மறைக்காட்டீசர்பதப்பணிந்திடீரோ..()

பாராயமாயமஞ்சள்வழுதலைபூசிப் ... ... *

பலநாளும்பொய்சொல்லிப் பணத்தையெல்லா
ஞ்,சாராயந்தனக்குவிலையாகநல்கிச்... ... *
சாலவுந்தான்கொடுத்தளவாய்த்தயங்கிவாங்கிப் *
பேராசையுடன்குடித்துவீதிதோறும் ... *
பித்தடைத்துதிரிபரத்தைபோகத்தின்பம் ... *
வாராததுன்பவருமவளைநீங்கி, மறைக்காட்டில

பணத்தினல்வசமாக்கப்படுவதல்லாற்..... *
பாவமொருவடிவானபரத்தைமாளாக் ... *
குணத்தினல்வசமாக்கப்படுமோநல்ல.... ... *
குலத்தினல்வசமாக்கப்படுமோமாந்தர் ... *
நினைப்பினல்வசமாக்கப்படுமோசற்றும்... *
நேசத்தால்வசமாக்கப்படுமோவுத்திப் ... *
பணத்தினலவர்போகமோகநீங்கிப்... ... *
பயின்மறைக்காட்டீசர்பதம்பணிந்திடீரே...()

பரத்தையர்தங்கபடடறிந்துதம்மைத்தாமே. *
பரிகரிக்கவேண்டுமென்றுபரிவாலன்றே ... *
கரத்தின்மழுவுடையபிரான்கவுரிதன்னைக் ... *
கருதியொருபாலமைத்தான்கரியமாயன் ... *
சிரத்தையுடன்மலர்மகளைமார்பிற்சேர்த்தான் *
தேவிதன்னாவிலயன்சேர்த்துவாழ்ந்தான் .. *
வரத்திலவர்மாயைவலைக்குள்ளாகாமல்... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே ...(௫௭)

நழுவுவொன்றறிந்துபணமுள்ளபேர்க்கு... *
நயப்பேசியிதம்பேசிநன்மைபேசித் .. ... *
தொழுவார்களழுவார்களொப்பதாகத் ... *
தூதுவிடுவார்கண்மெத்ததோழிமாரை... ... *

விழுவார்களுடன்மீதிற்சிணுங்கிச்சற்றும் ...*
வேண்டியதுபொருள்பறித்துவிட்டுமெள்ள.*
வழுவுடைந்தப்பரத்தையரைவிட்டுநீங்கி ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே... (௫௮)

நினைவதெல்லாம் குடிகெடுக்கு நினைவேபார்
த்து,நிற்பதெல்லாமயல்பூட்டுநெஞ்சந்தானே*
புனைவதெல்லாமுலைமீதிற்கிழியுங்கிள்ளும் ...*
புகல்வதெல்லாம்வஞ்சகமும் பொய்புஞ்சூதும்.
நனைவதெல்லாம்பொய்யழுகைக் கண்ணீர்தன்
னி,நடப்பதெல்லாம்பணம்பறிக்கநயமேகண்
டீர்,அணைவதெல்லாம்பித்தளைமேயாயவரை நீங்கி,
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே... (௫௯)

நானிருக்கநீர்புறம்பேபோகலாமோ, ஞாய
மோவும்மையெத்தநாகரீகர், தானிருக்கநான்பு
றம்புபோகலாமோ, தருமமோவெனவலியச் ச
ருவிக்கூடி, ஊனிருக்கவுயிர்வாங்கும் வேசிமா
ரை,புறமென்றுமொருநாளுநம்பவேண்டா...*
மானிருக்குங்கையானையெய்பிரானை ... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே ...(௬௰)

மாமியார்பரத்தையர்க்குத்தாயாரான, மாமி
யார்நரைத்ததெல்லாம்லச்சைகெட்ட, மாமியா
ர்முகமினிக்கிமஞ்சள்பூசு,மாமியாரெண்ணெய்ப்
க்துண்மயிர்போலவாங்கு,மாமியார்புலையருக்கு
மகளைக்கூட்டும், மாமியாராசைக்கு மருந்தூகூ
ட்டும்,மாமியார்மாயவலைக்குள்ளாகாமல் ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே ...(௬௧)

படியென்பார்படியளந்துகொடுத்தால்மா
தப், பணமென்பார்பணமுழுதுங்கொடுத்தாற்
பொன்னின், கொடியென்பார்கொடிபண்ணி
க்கொடுத்தாலல்ல, கொப்பென்பார்கொப்பிர
ண்டுங்கொடுத்தாற்கந்தப், பொடியென்பாரிப்
படிபேசூறைகொண்டு, போதுமென வொரு
நாளும் புகலார்கண்டீர், மடியென்பார் பரத்
தையரைவிட்டுநீங்கி, மறைக்காட்டிலம்மானைவ
ணங்குவீரோ ... ... ... ... ... (௬௨)

செய்யாதவஞ்சனைகள்செய்வார்தம்மைச். *
சேர்ந்தவர்கைப் பொருளை யெல்லாஞ்சேரக்
கொள்வார், பொய்யாணை யிடச்சற்றுங்கூசார்
வேண்டும், பொருள்கொடுத்தாற்புலையரொடு
போகஞ்செய்வார், கையாசையன்றிவேறாசை
கொள்ளார், கண்ணாலும் பரத்தையரைக்காண
லாமோ,மையாடச்சுருளோதிடாகத்தானை ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௬௩)

மாழியார்படித்ததெல்லாம்புழுதிமாயம். *
மாழியார்குடிப்பதெல்லாம்வடிசாராயம் ... *
மாழியார்நினைப்பதெல்லாங்கபடுஞ்சூது ... *
மாழியார்செய்வதெல்லாமாயவித்தை ... *
மாழியார்கெடுப்பதெல்லாமிளைஞோர்தம்மை.
மாழியார்வேசியர்க்குத்தாயாரான ... *
மாழியார்தோதகத்துக்குள்ளாகாமல்,மறைக்.)

நிலத்திலேபெரியாலைநிலமேதுன்பம் ... *
நிணத்திதேவிலைபாதர்நிணமேதுன்பம் ... *

சலத்திலேயுப்புறைக்குஞ்சலமே துன்டம் ...*
தருவிலேயெட்டியெனுந்தருவே துன்பம்...*
குலத்திலேபரத்தையர்தங்குலமே துன்பம்...*
கூறினேன்பரத்தையர்தங்கொள்கைநீங்கி ...*
வலத்திலேபழுவுடையவெம்பிரானை ... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (௬௫)

படும்பட்டார்விலைமாதரல்குற்றோய்ந்து ..*
படுகுழியில்விழுந்தலைந்துபணமுந்தோற்று*
கடன்பட்டுமனைமாடுகன்றுவிற்றுக் ... ...*
கலம்விற்றுநிலம்விற்றுக்காணிவிற்றுத் ...*
திடம்பட்டசிறுபயல்கடமையும்விற்றுத் ..*
திருடராய்க்கன்னமிட்டுத்திரியவேண்டாம்...*
மடம்பட்டவிலைமாதர்மயலைநீங்கி ... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௬௬)

காணமேலநீயொன்றுகருதலாமோ .. ... *
கடற்கிளிஞ்சில்வெள்ளியென்றுகாணலாமோ*
மீனெல்லாமதியென்றுவிளம்பலாமோ ... *
மின்மினியைவிளக்கென்றுமொழியலாமோ. .*
ஊனெல்லாமிருக்கவுயிர்வாங்கும்வேசி... *
உறவென்னவொருநாளுநம்பவேண்டாம் ...*
வானெல்லாநிறைந்திருக்குமெம்பிரானை ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ .. (௬௭)

ஆகமங்களிருக்கவேயதின்மேற்சந்தும் .*
அளாக்கணமேயாளுமனதில்லாமல்... ...*
பாகவடிவுருவானபரத்தைமாரைப் ... ... *
பலகாலுநம்புகின்றபாவிகாளோ ... ...*

நாகவிஷமந்திரத்தாற்றிரும்பும்வேசி ... *
நாய்மருந்துவிஷம்பட்டாலெவராற்கூடும் ... *
வாகனமாபெருமேதேறுமெம்பிரானை, மறைக்காட்
டெலிமேயாடிப்பொறியிலிரையெடுக்குமாபோ
ல், ஈசலினமெடிவளையிலெய்துமாபோல் ... *
புலிமேயாடிக்கற்கூண்டிற்புகுதுமாபோல் ... *
புனலோடிமீன்றூண்டில்பிடிக்குமாபோல். .. *
சலியாமற்பொய்பேசும்பரத்தைமானாத் ... *
தழுவியேபலநாளுஞ்சனிநோய்கொண்டு ... *
வலிபடுத்துநோயடுத்துத்திரியவேண்டா ... *
மறைக்காட்டிலெம்மானைவணங்குவீரே ... (௬௯)

பாக்கிலேமருந்தையிடும்பரத்தைமாரைப் *
பலகாலுஞ்சேர்ந்திருந்துபணமுந்தோற்று .. *
மூக்கிலேயிடிவிழுந்துகுணகுணென்று, முழ
ங்காலிற்சூலைவந்துமுடவனாகி, நாக்கிலேமருந்
தறியாவருக்கும், நம்பாமற்பேச்சுரைக்குநரகு
க்கிடாய், வாக்கிலேபரத்தையணையுளாத்தநீங்கி *
மறைக்காட்டிலெம்மானைவணங்குவீரே ... (௭௰)

பணந்தானேபறிக்கின்றபரத்தைமாரோ ... *
பலநாளுயிர்பதிக்கும்வேசிமார்காண் ... *
குணந்தானேயிரக்கமாய்வணங்கிப்பேசம் ... *
குணமெல்லாங்குடிகெடுக்குங்கொள்கைதானே
தினந்தானேபரத்தையரைச்சேர்ந்தான்மெத்த.
தீங்குவருஞ்செய்தொழில்போந்திருடராவார் *
வணங்காதபுரமெரித்துவிடைமீதேறும் ... *
மறைக்காட்டிலெம்மானைவணங்குவீரே ... (௭௧)

சூதுவினைசதிபாவமெத்தவுண்டு, சொல்லவி
ளிமுடியாதுபரத்தைமார்க்கு,வாதுகளுங்கபடு
களு மயக்கச்சொல்லும்,வல்லடியுமெத்தவுண்டு
பரத்தைமாருக், கேதுசற்று நீதியில்லைநிலைமை
யில்லை, எச்சமில்லைவெட்கமில்லைபரத்தைமார்க்
கு,மாதுமையாளொருபாதியெம்பிரானை ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ... (எஉ)

மெழுகோடேகோழிமுட்டைகலந்துகூட்டி
யினிக்கிமுக முலைக்குநல்ல மஞ்சள்பூசிக், கரு
கோடேயிருக்குமந்தப்பிணமென்றுஞ் ...*
கையிலேபொருள்கொடுத்தாற்கலந்துபோகம்
வழுவாதேசெய்யுமந்தப்பரத்தைமாரை.... *
வருந்தியேபொருள்கொடுத்துமாயவேண்டா*
மழுவேந்துங்கையானையெம்பிரானை ... ...*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(எ௩)

தேவடியாளொருத்தியவளனேகப்பேர்க்குத்
தினந்தினமும்பெண்டெனவேசேர்ந்துகூடி *
நாவடியிலிருக்குமந்தவுதட்டிலே[illegible],நல்லமிர்த
மிருக்குமென்றுநாய்போல்பற்றிச ... ... *
சோகைவடிவாகியேபிணிநோய்கொண்டு... *
தொல்லுலகிற்றுரோஷிகளாய்த்திரியவேண்டா..*
மாவடியிலிருக்குமந்தவெம்பிரானை, மறைக்கா

மோரிருக்கச்சாராயந்தேடிவாளடி,முதலிரு
க்கவெட்டியினீர்மொண்டுவார்த்தும், ஊரிருக்
கப்பறைச்சேரிதேடி நல்ல, உடைக்காடையிருக்
குமறவுநிலையைப்போர்த்துச், சீரிருக்குமனையாட்

டியிருக்கமாய்த், தெரிவையர்க்கூட்டேடிநொ
ந்துதிகைக்கவேண்டா, மாரிருக்குந்திருமாலுமை
யனுங்காணு, மறைக்காட்டிலம்மானை வணங்கு
வீரோ... ... ... ... ... ... ...(௭௫)

கழுகோடிப்பார்க்கும்ரத்தநீரிலேதான் ...*
களைபாற்றவேண்டுமென்றுகருதுமாபோல். ..*
அழல்போலநின்றெரியுங்கானலுக்குள்... ...*
அள்ளிநீர்குடித்துழலைபடங்குமாபோல் ... *
விழவானபேச்சுடையவேசியாசை ... ...*
மெய்யென்றுநம்பிநீர்மெலியவேண்டாம் ...*
மழுவொருகைமானொருகைவைத்துளானை ..*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ... (௭௬)

கற்றதெல்லாம்பொய்சூதுகபடுதானே, கள்ளமயல்பொருந்திநிற்குங்கபடிகட்கே, யெத்தனைதானுபகாரம்பண்ணினாலும், எப்போதுமனதுதயவில்லாதார்களை, செத்தபிணமானாலும்பொருளைக்கண்டால்,சிக்கெனவேதழுவிமெள்ளச்செய்வார்போக, மந்தகசமுகத்தானையளித்துளானை, மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே.

கடிதானவிஷப்பாம்புகடித்தாலப்போ, கடுகியேமந்திரத்தாற் கழிக்கலாகும், கொடிதானதுர்ச்சனர்தம் விஷமென்றாலும், கொஞ்சமதாடப்புறப்புக்குள்ளேதீரும், இவ்வாயில்பரத்தையர்தம் விஷமேயென்றால், எழுபிறப்புமீளாதங்கவலைநீங்கி, வடுவானகன்னியிடப்பாகத்தானை மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ... (௭௭)

கோடிசெம்பொன்கொடுத்தாலு மானைமே
லை, குதிரைகளைக்கொடுத்தாலுங்குறைவேனென்
று, வேடர்பதிபோற்பரிக்குப்பேசியாசை ...,*
மெய்யென்றநம்பியேமெலிந்துசேர்ந்து ...*
தேடியளித்தநிதிகளெல்லாந்தோற்றுத் ...*
திருடாய்ப்புவிமீதிற்றிகைத்துமெத்த ...*
வாடிமுகஞ்சோர்ந்திருந்துமயங்கவேண்டா;*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே ... ௭௧)

கொண்டாடிமேல்விழுந்துநயங்கள்பேசிக்
கூசாமல்சேர்ந்து நிதிகொடுவாவென்று, திண்
டாடத் தெருவாசல் முன்னேவிட்டுத், திருட
னென்றுகல்முதுகிற் சுமக்கவைத்துட், பெண்
டாட்டி. வில்லென்று பெற்றதாயைப், பிள்ளைக
ளைவில்லென்று பெருகப்பேசி, வண்டாட்டம்
பேசுபரத்தையரைநீங்கி, மறைக்காட்டி லம்மா

கண்டாரைவரவழைத்துக்கொண்டுட்சென்று
கட்டின்மெத்தைமீதில்வைத்துக் கண்கைகாட்
டி, பண்டொருநாள்வந்ததொன்றிதவதாகப் ...*
பசப்பியேபாஷாணவுண்டைபாய்ச்சி ...*
உண்டானபொருளையெல்லாங்கைக்குட்பற்றி.*
உபாயத்தாற்றுரங்காக்கியோட்டுவார்காண் ..*
வண்டாருங்குழலுமையாள்பாகத்தானை ......*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே ... (௭௨)

உடனுறக்கட்டநிதி யுள்ளபோதில், உனைப்பி
ரிந்தாலியான்சாவே னுன்னடையென்பாள், இடு
ம்போதுசோற்றிலே தானுங்கூடி, இருந்துண்

உரலொழியவெனக்கிரங்காதென்பாள் ... *
கொடுபொருளு மாண்டாற்போ போபோவெ
ன்று, துட்டுவாள் தாய்போலேகுழைப்பாளந்த.. *
மடவார்கள்மாயையினிவிட்டுநீங்கி ... .. *
மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ...(௮௨)

சாதிகுலமுறையில்லை தயவோவில்லை, சதிபா
வஞ்சற்பனைகள்சாலவுண்டு, நீதியில்லைகுற்றமில்
லை நினைக்கும்போது, நினைவெல்லாங்குடிகெடுக்
கும்நினைவேகண்டீர், பாதியுலகளித்தாலுமென்
னதந்தீர்,பத்தாதென்றேயுரைக்கும்பரத்தைமா
ர்கள், வாதனையிற் றிரிந்துழன்று மயங்கவேண்
டா,மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ(௮௩)

பேச்சென்றாலமிர்தம்போற்பேசுவார்கள் *
பேய்மடவாராசைகொண்டாற்பொருள்களெல்
லம்,ஆச்சென்றாலகத்தினைவிட்டப்பாலோட்டி
அதற்கேற்றபேர்களைக்கொண்டடித்துத்தள்ளி
ப்,பூச்செண்டாலெறியுமந்தக்கைகளாலே, பெ
ருங்கல்லைவிட்டெறிவார்பொதுவின்மாதர் .. *
மாசசிறைந்தபுகழுடையவெம்பிரானை ... *
மறைக்காட்டிலம் மானைவணங்குவீரோ... (௮௪)

சிங்காரமாகமுகமினுக்கிநல்ல, திலதமிட்டுக்
காமுகனைத்தேடிமெள்ள, டாங்காரமாய்வழக்
[illegible]மல்வீழ்த்தும,பிறிந்திருப்பதில்லையெ
ன்பார்பிழையேனென்பார், எங்காகிற்போகுமெ
ாதகுமோவென்பார்,இப்படியேபொருள்பறி
ப்பாரிணக்கம்நீங்கி, மங்காதவாழ்வளிக்குமெம்

பிரானை,மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ..

ஈபாமல்தேன்போலப் பொருளைச்சேர்த்தே
எவர்வந்துகேட்டாலுமில்லையென்று, தாயானை
க்குருவாகப்புத்திகேட்கும்,சாராயவாய்ச்சியர்க்
குத்தானேயீந்து,பேயானவடிவாகிப்பித்தனாகி
ப்,பெண்டீர்க்கும்பெற்றவர்க்குப்பேதனாகி.*
மாயாமல்வினை மாதர் மயலைநீங்கி ... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ...(௮௬)

எதுக்கெயிருவருமாகூடிவாழ ... ...*
என்டாக்கிபமோமலரோனெழுதுமாறு ... *
பாதகமோசெய்திருக்கும்பாவியேற்கும் ...*
பலன்வந்துகிடைத்ததென்றுபசுப்புமாயக். *
கோதைபருக்கிணங்கியேகுணந்தான்கெட்டுக்.
கோல்குடுவைகையேந்திக் கொடுநோய்கொண்
டு,வாதபிதுவென்ருருக்கால்தூங்கிடாமல். *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ... (௮௭)

சாலவெகுபொருளுடையார் வீட்டில்வந்தா
ல்,தனித்துவந்ததேதுசற்றுத்தயவுதானே ...*
மாலயனுந்தீயோனுங்கூடித்தேடி ... *
வருத்தபடிவந்தீராமதன்போலென்று ...*
காலவிடமடவார்சொல்கருதிச்சேர்ந்து... *
கைப்பொருளுந்தோற்றலக்கீற்கள்ளனாகி ...*
வாலவயதிழந்துமதிமயங்கிடாமல் ... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ...(௮௮)

வேதியர்கள்குருமார்கள்வீட்டில்வந்தால்...*
வீணர்கள்வந்தார்களென்றுவெகுண்டுபேசி.*

ஞாதியர்கள் நாவலர்கள் நாடிவந்தால் ... ... *
நமன்போல்வந்தாரென்றுநழுவியோடி ... *
வீதியிலேவிலைமாதரகமேசென்று ... .. *
வேண்டியதோர்பொருள்கொடுத்துவீணராகி.
வாதனையும்பலநோயுங்கொண்டிடாமல் ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௮௯)

இப்பிறப்பெல்லாந்தேடியிருந்திந்நாளா..*
யென்மனத்துக்கேற்றவநீரின்றுவர்தீர். ... *
எப்பிறப்பிற்காண்பதுமைப்பிரிந்தால்றே.*
யில்லிளவிலிமேருந்தாலிரக்கமாகக் ... ...*
கைப்பொருளெல்லாம்பறித்துக்கடக்கவோட்
டும்,கள்ளமபல்மடவார்சொல்கருதிடாமல்,..*
வைப்பதுவேமுடிமீதில்மதியாளுனா .. .*
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௯௰)

பார்த்தாலும்பசுப்போலவிருப்பார்சற்றே*
பாய்ந்தாலும்பெரும்புலிகள்போலேபாய்வார்.
கூத்தாடியபிநயமுங்காட்டிக்கொங்கைக் ..*
குடங்காட்டிப்பொருள்பறிக்கும்பரத்தைமார்
கள்;நர்த்தனாக்கிச்சைகொடுத்திரிந்தெந்நாளு
ம்,நினைவழிந்துமதிமயங்கிநிலைமையாறி ... *
மாற்றுருக்கிருத்தகுடியாயிராமல் ... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௯௧)

இவ்வாருங்குலபத்தாய் தந்தைமாரு, மெவ்
லோருங்குலைபடபவில்பாளாகக், கொல்லாமல்ம
ருத்தையிட்டுப்பொருளைவாங்குந்,கோதைமார்க
ள்சொற்கேட்டுக்குடிதான்கெட்டுப், பொல்லா

றென்றுடம்பெடுத்துப்பொருளுந்தோற்றுப்.
பெருமரத்திலுளுப்பிடித்துப்பெலம்போகும்
போல், வல்லாண்மைகுலத்திமதிமயங்கிடாமல் *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௩௨)

சுத்தவிஷமடவாரைச்சேர்ந்துவாழ்ந்து . *
சோகைவடிவாகிமெத்ததுரும்பனாகி, பெற்றவ
ர்க்கும்பகையாகிப்பிறந்தபேர்க்கும், பெரும்ப
ழிபாப்பழையபொருளும்பேர்த்துப்பேர்த்திட் *
டித்தனையும்படுவதல்லால்நரகுக்கிடா ... *
மெப்போதும்பரத்தையரோடிணங்கிடாமல் *
மத்தகத்தையுரித்துமேற்போர்த்துளானை ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௩௩)

வெற்றிளைப்பாய்த்திரிந்துழன்றுவெகுளுவ்
வீறாய், வேசியர்தம் மருந்தாலே மிகப்பேய்க்
கொண்டு, முற்றத்தேவந்துநின்றுலாரமேறி. *
முகம்பார்த்துப்புலர்ந்துபெருமூச்சுவிட்டுச் *
சித்தத்தேநினைந்துருகிமயங்கிவாடித், தெரிவை
யர்க்கேபொருள்கொடுத்துத்திகைக்கவேண்டா
ம், வைத்தசடைமீதில்நதிமதியிருவனை ...
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ...(௩௪)

பறிக்கும்வகை யினைத்தேடாப்பரத்தைமாரி
கள், பச்சிலையைப்புழுவரிக்கும் ப[illegible]ம்போலக்
கறிக்கடுத்த மிளகுமில்லை புளியுமில்லை, கைக்கு
மொருகாசில்லைகடனுந்தாரார், சிறிக்கிகட்டு
புடவையில்லையென்று பேசத், தெட்டிமெ
ருபொருள் பறிக்குந் தெரிவைமானா, மறந்து

கெலாம்போற்றும்மெய்ப்பிரானை ... ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே .. (௬௫)

தெட்டிவெகு பொருள்டறிக்குந் தெரிவை
யரைச், செருக்குடனேசேர்ந்திருந்த சிலநாள்
தன்னில், ஒப்பியப்புண்பிரமியங்கபாலசூலை .. *
ப்பிணைமும்பலவாயுமொன்றாய்க்கொண்டு ... *
கெட்டுமிகவுடல்தளர்ந்தேயிளைப்பறுக்க், கெடு
நரகுக்கீடாகக்கிடந்திடாமல், மட்டுடநல்விலைமா
ர்மயலைநீங்கி, மறைக்காட்டிலம்மானைவ .(௬௬)

சத்தியம்பொய்கொலைகளவுக் கஞ்சிச்சற்று
ந், சலியாதபரத்தையரைச்சருவிச்சார்ந்தால் *
எத்திசையும்பரந்துழன்றுநரகுக்கீடா, யெல்லா
ர்க்கும்பொல்லாராயிருந்துவாழ்வார், பத்தியுட
ன்சிவனருள்சேர்பெரியோர்தங்கள், பதமலரை
த்தினநினைந்தாற்பரகதிக்கே, வைத்திடுவார்விலை
மாதர்மயலைநீங்கி, மறைக்காட்டிலம்மானை (௬௭)

முன்னொருநாள்நீர்வந்துபோனநாளாய், . *
ருடிகேட்டுப்பெண்ணேபிடாள் முகமுஞ்சோர்ந்
ள், பின்னொருவர்வந்தாலுந்திருப்பிப்பாரான்
பேசாமலிருக்கின்றாள்பிணக்குங்காணேன் *
என்னமயலுன்மீதிற்கொண்டாளென்றே ... *
யிப்படிப்பொய்சொலுங்கிழவிக்கிணங்கிடாமல் .
ப னவருமலரோனுமாலும்போற்றும் ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே .. (௬௮)

கையதனிற்பொருள்மிகவேதந்தபேர்கள் *
கழித்துவிட்டுப்போகும்வகைகண்டால்மெத்த,

பொய்பழுகையழுதிசற்றேயுடல்மேல் வீழ்ந்
து, பொன்னாசைகொண்டவள்போற்புலப்பிதை
ந்து, செய்தகுற்றமேதுமக்குச் சொல்வீரென்
னுந், தெரிவையரைச்சேர்ந்தவேதிருடராகி *
வையகத்துள்ளீனராய்மடங்கவேண்டாம் ... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ... (௧௯)

பெற்றதாய்கழுத்தணிந்தநகையானாலும். *
பெண்டாட்டிதனக்கிட்ட நகையானாலும் ... *
உற்றதவத்தொருகுழந்தைபணியானாலும் ... *
உடுத்துவைத்தபழம்புடவையேயானாலும் .. *
தெற்றெனவேகவர்ந்துபோய்ப் பரத்தைக் கீந்
து, சிக்கெனத்தாய்தந்தையரைத் தெருவேகண்
டால், வற்றன்மரம்போனின்றுமயங்கிடாமல்... *
மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ... (௨௰)

பகர்பழம்புண்ணெளிபரிகாரியென்னும், பழ
மொழிபோற்பரத்தையராசையினாற்கண்ட .. *
சுகம்போதுமென்றுமனத்துயரங்கொண்டு. *
சேர்மதலசிகாமணிகூறுந்தமிழ்த ... *
தகவில்பரத்தையர்மாலைகேட்போரெல்லாருஞ் *
சாலமிகச்செயும்பரத்தைமாரைநீங்கி .. ...
மகிமைபெறுமறைக்காட்டம்மானைவாழ்த்தி. *
மனையறம்வாழாதினிதுவாழ்ந்துய்வாரோ... (௨௰௧)

பரத்தையர்மாலை-முற்றிற்று.